**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 156** **நாள்: 11.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உலக மனநல நாளை முன்னிட்டு சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக நோய்த்தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

உலக சுகாதார நிறுவனத்தால், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 10ம் தேதி, மனநலம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, உலக மன நல நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் ‘‘மாறும் உலகில் இளையோர் மனநலம்’’ என்று இளம்பருவத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக செம்பொருள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை மற்றும் சென்னை மாவட்ட மனநலத் திட்டத்துறை சார்பில், இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வேப்பேரி, பென்டிங் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மனநலம் குறித்து விழிப்புணர்வு முகாம் 10.10.2018 அன்று நடைபெற்றது. இம்முகாமில் சுமார் 600 பள்ளி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மனநலம் என்னென்ன வகையில் பாதிக்கப்படுகிறது. அவற்றை தடுக்கும் முறைகள் குறித்தும், பேணிகாப்பது குறித்தும் மாணவியர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பரிசுகளும், அனைத்து மாணவியர்களுக்கும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இறுதியில் மாணவிகள் அனைவரும் ‘‘மனநலத்தை காப்பது’’ குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தொடர்ந்து, சுற்றுச்சூழல் பேணி காப்பதை வலியுறுத்தி பள்ளி வளாகத்தை சுற்றி மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், சென்னை மாவட்ட மனநல திட்ட மருத்துவர் மு.லட்சுமி, பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜி.தங்கராஜ், தலைமையாசிரியை மரியம் உஷா ராணி மற்றும் ஆசிரிய பெருமக்கள், மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**